வருமானவரியிலும்சேமிக்கலாம்... இப்படி!

''வருமானவரிசெலுத்துவதுஎன்பது, ஒவ்வொருகுடிமகனின்கடமை. அதேபோல, வருமானவரிவிலக்குப்பெறுவதும், அதற்குத்தகுதியானவர்களின்உரிமை. ஆனால், பலரும்அதைபயன்படுத்திக்கொள்ளும்வழியைஅறியாமல், பின்பற்றாமல், ஆண்டுஇறுதியில்கிட்டத்தட்டதங்களின்ஒருமாதச்சம்பளத்தைவரியாகச்செலுத்துகிறார்கள்'' என்றுசுட்டிக்காட்டும்சென்னை, தாம்பரத்தைச்சேர்ந்தஆடிட்டர்எஸ்.சதீஷ்குமார், வருமானவரிவிலக்குப்பெறும்முறைகளைவிரிவாகவிளக்குகிறார்...




**கல்விக்கடன்அல்லதுகல்விக்கட்டணம்**
**(UNDER SECTION 80C)**

''பிள்ளைகளின்பள்ளிமற்றும்கல்லூரிக்கட்டணங்களைமுன்னிறுத்தி, பெற்றோருக்குவருடத்துக்கு ` 1.5 லட்சம்வரைவரிவிலக்குஉண்டு. இரண்டுபிள்ளைகள்எனில், கணவன் ` 1.5 லட்சத்துக்கும், மனைவி ` 1.5
லட்சத்துக்கும்எனதனித்தனியாகமொத்தம்மூன்றுலட்சத்துக்குவரிச்சலுகைபெறமுடியும். இரண்டுக்குமேற்பட்டபிள்ளைகளின்கல்விக்கட்டணங்களுக்குவரிச்சலுகைகிடையாது.

மாணவர்பெயரில்பெறப்படும்வங்கிக்கடனுக்கானவட்டிக்கும், SECTION 80E-ன்படிவரிவிலக்குஉண்டு. இதற்குவரம்புஇல்லை, எவ்வளவுரூபாய்வட்டிசெலுத்துகிறோமோஅனைத்தையும்வரிவிலக்குக்குஎடுத்துக்கொள்ளமுடியும். கடன்பெற்றதில்இருந்துஏழுவருடங்கள்வரைஇதைபெறமுடியும்.


## பயணத்துக்கான (சுற்றுலா) வரிவிலக்கு
## (LTC - Leave Travel Concession - 10(5) செக்‌ஷன்)

ஒவ்வொருவருடமும், ஏப்ரல்முதல்மார்ச்வரை (உதாரணம்: 2016 ஏப்ரல்முதல் 2017 மார்ச்), LTC கணக்குமுடிக்கப்படுகிறது.
பயணத்துக்கானசெலவுகளைநான்குவருடத்துக்குஒருமுறைவரிவிலக்குக்காகக்ளெய்ம்செய்யலாம். ஒருவேளை, நான்குவருடங்களில்சுற்றுலாசெல்லமுடியாமல்இருந்திருந்தால், அதைசமன்செய்ய, அடுத்தநான்குவருடத்தின்முதல்வருடத்தில்சுற்றுலாசென்று, க்ளெய்ம்செய்யமுடியும். கூடவே, வரவிருக்கும்நான்குவருடத்துக்கானவாய்ப்பையும்பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்தசலுகையைப்பெறுவதற்கானவிதிமுறைகள்சிலவற்றைப்பார்ப்போம்.
வெளிநாடுசெல்லஅனுமதிஇல்லை. இந்தியாவுக்குள்எங்கும்பயணம்செய்யலாம். ரயில், விமானம், பேருந்துடிக்கெட்டுகளைமட்டுமேசமர்ப்பிக்கமுடியும். கார், கால்டாக்ஸி, ஷேர்ஆட்டோ, தங்கும்விடுதி, உணவுச்செலவுகள்இதில்சேர்க்கப்படமாட்டாது.
அனைத்தையும்ஒரிஜினல்ரசீதுகளாகச்சமர்ப்பிக்கவேண்டியதுஅவசியம். LTC க்ளெய்முக்குகட்டாயமாகமெடிக்கல்லீவில்போகமுடியாது.
பெற்றோரைச்சார்ந்திருக்கும்இரண்டுகுழந்தைகளைஉடன்அழைத்துச்செல்லலாம். ஒருவேளைஇரண்டாவதுடெலிவரியில்இரட்டைக்குழந்தைஎனில், மூன்றுகுழந்தைகளுக்குஅனுமதிஉண்டு.

வேலைக்குச்செல்லும்பிள்ளைகள்/திருமணமானபிள்ளைகளின்செலவுகளைவரிவிலக்குக்குச்சமர்ப்பிக்கமுடியாது. இன்னொருமுக்கியமானவிஷயம்... கணவன், மனைவிஇருவரும்ஒரேரசீதுகளைவரிவிலக்குக்குப்பயன்படுத்தமுடியாது. எனவே, யார்பெயரில்க்ளெய்ம்செய்யவேண்டுமோ, டிக்கெட்பதிவுகளைஅவர்பெயரிலேயேசெய்யவேண்டும்.

சதீஷ்குமார்



## ஹெல்த்இன்ஷூரன்ஸ் (மெடிக்கல்இன்ஷூரன்ஸ்) பிரீமியத்துக்கானவரிவிலக்கு
## - UNDER SECTION 80 D):

மெடிக்கல்இன்ஷூரன்ஸுக்காகநீங்கள்செலுத்தும்பிரீயமித்தொகைக்குவரிவிலக்குஉண்டு. உதாரணமாக, ஒருகுடும்பத்தலைவன்இரண்டுலட்சம்ரூபாய்மெடிக்கல்இன்ஷூரன்ஸ்பாலிசிஎடுத்து, வருடத்துக்குசீனியர்சிட்டிசன்களானதன்பெற்றோருக்கு 20,000 ரூபாயும்... தான், தன்மனைவி, குழந்தைகள்எனதன்குடும்பத்துக்கு 15,000 ரூபாயும் (2015 பட்ஜெட்டில்மூத்தகுடிமக்களுக்கு ` 30 ஆயிரம், மற்றவர்களுக்கு ` 25 ஆயிரம்எனஉயர்த்தப்பட்டுள்ளது) ஹெல்த்இன்ஷூரன்ஸ் (மெடிக்கல்இன்ஷூரன்ஸ்) பிரீமியமாகக்கட்டிவருகிறார்என்றுவைத்துக்கொள்வோம். இதற்கானபில்களைவரிவிலக்குக்குசமர்ப்பிக்கலாம்.




**ஆயுள்காப்பீடுபிரீமியத்துக்கான (லைஃப்இன்ஷூரன்ஸ்) வரிவிலக்கு - 80 சி**

ஆயுள்காப்பீட்டுநிறுவனத்தில்நீங்கள்எடுத்துள்ளபாலிசிக்காககட்டிவரும்பிரீமியத்தொகைக்குவருமானவரிவிலக்குஉண்டு. உதாரணமாக, 10 லட்சரூபாய்பாலிசிதாரராகச்சேர்கிறீர்கள்என்றால், அதன்பிரீமியத்தொகையைகுறிப்பிட்டமூன்றுமாதங்கள், ஆறுமாதங்கள், வருடம்ஒருமுறைஎன்றுவசதியைப்பொறுத்துசெலுத்திவரலாம். அதற்குரியவருமானவரிவிலக்குஉண்டு. உதாரணமாக, சிங்கிள்பிரீமியம்எனும்வகையில்அந்த 10 லட்சத்தையும்ஒரேதொகையாகக்கட்டுகிறவர்கள், இதில் 10% (`1 லட்சம்) வரிவிலக்குப்பெறலாம். ஆனால், அதற்கானவருமானவழிகளைசரியாகச்சமர்ப்பிக்கவில்லைஎனில், வருமானத்துக்குஅதிகமாகபிரீமியம்கட்டப்பட்டிருந்தால், 30% வருமானவரிகட்டவேண்டிவரும்.

**கணவனின்வருமானத்தை, மனைவியின்பெயரில்சேமிக்கலாமா?**

மாதந்தோறும்கட்டும்பிரீமியத்தொகையைமனைவிக்கு... கணவன், கணவனுக்கு... மனைவி, பெற்றோருக்கு... மகன்எனவருமானம்பெறும்எவரும், பிறர்பெயரில்செலுத்தி, அந்தத்தொகைக்கானவரிவிலக்கைப்பெற்றுக்கொள்ளலாம். அதில்கவனிக்கவேண்டியவிஷயம், கணவர்மாதம் 20 ஆயிரம்ரூபாய்வருமானம்பெறுகிறார்என்றால், மனைவிக்குமூவாயிரம்அல்லதுஐயாயிரம்போன்றுசிறியதொகையைத்தான்பிரீமியமாகக்கட்டவேண்டும். தன்வருமானத்தைதாண்டி, மனைவியின்பெயரில்முதலீடுசெய்தால், வருமானம்எங்கிருந்துவந்ததுஎன்கிறகேள்விஎழுப்பப்படும். எனவே, கணவன்மனைவிக்குபிரீமியம்செலுத்திவந்தால்கணவன்பெயரிலேயேகாண்பிக்கவேண்டும்'' என்றுதகவல்கள்தந்தசதீஷ்குமார், ``வரிவிலக்கைபயன்படுத்திக்கொள்ளுங்கள்!'' என்றுவிடைகொடுத்தார்.




**வரி... சிலவரிகள்!**

2014-ல்இருந்துஆண், பெண்பாகுபாடின்றிஇருபாலரும்தங்களின்வருடஊதியம் 2.5 லட்சரூபாய்க்கும்மேல்போனால்வரிசெலுத்திஆகவேண்டும்என்பதுகட்டாயம். இதில்பெண்களுக்கெனஎந்தவிதவரிச்சலுகையும்கிடையாது.

ஒருநிறுவனத்தில்பணிபுரியும்போது, உதாரணத்துக்கு 15,000 ரூபாய்சம்பளதாரருக்கு, நிறுவனம் 1,500 ரூபாயும், சம்பளதாரர் 1,500 ரூபாயும்எதிர்காலஓய்வூதியத்துக்குசெலுத்திவரவேண்டும். இதுதான்பிராவிடண்ட்ஃபண்ட்எனப்படும்பி.எஃப். இதில்நிறுவனம்செலுத்தும்தொகைக்குவரிவிலக்குஇல்லை. ஆனால், சம்பளதாரர்செலுத்தும்தொகை 1.5 லட்சத்துக்குள்செலுத்தும்வரைவரிவிலக்குஉண்டு.

சுயதொழில்செய்பவர்கள், அஞ்சலகத்தில்பப்ளிக்பிராவிடண்ட்ஃப்ண்ட்மூலமாகபணம்செலுத்தி, 1.5 லட்சம்வரைவரிவிலக்குப்பெறலாம்.

80 சிஃபிக்சட்டெபாசிட்ஸ்கீம் (நிரந்தரவைப்புநிதி - 80C fixed deposit scheme): இந்தஸ்கீம்வழியாகடெபாசிட்செய்துவரும்பணத்தைஐந்துவருடம்வரைஇடையில்எடுக்கமுடியாது. இதற்கும்அதிகபட்சதொகையாகஒருவருடத்துக்கு 1.5 லட்சம்ரூபாய்வரிவிலக்குஉண்டு (பள்ளிமற்றும்கல்லூரிக்கட்டணம், பிராவிடண்ட்ஃபண்ட், இன்ஷூரன்ஸ்பிரீமியம்இவைஅனைத்தையும்சேர்த்து).

**காலக்கெடு**

பொதுவாகவருமானவரிக்கணக்கைஒவ்வொருவருடமும்ஜூலை 31-ம்தேதிக்குள்தாக்கல்செய்யவேண்டும். இந்தஆண்டுஆகஸ்ட் 31-ம்தேதிவரைகாலக்கெடுநீட்டிக்கப்பட்டுள்ளது.

வே.கிருஷ்ணவேணி